**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்.**
**O.S.No.357/2010**

2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879ம் ஆண்டின் 10 வது சட்ட விதிகளின் படி திருமதி. சரஸ்வதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வி | தொழில் | : | |
| கணவர் பெயர் | : | சங்கர் | கிராமம் | : | |
| வயது | : | 63 | வட்டம் | : | காஞ்சிபுரம் |

**பி.வா.சா.1 முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது. அதிலுள்ள சங்கதிகள் நான் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது.

| தேதி | ஆவணங்கள் விவரம் | ஆவண எண் |
|---|---|---|
| 15.04.2023 | எனது கணவர் பெயரில் உள்ள மின் கட்டண ரசீது அசல் | பி.வா.சா.ஆ.1 |
| | எனது கணவர் பெயரில் உள்ள மின் கட்டண அட்டை அசல் | பி.வா.சா.ஆ.2 |
| 14.07.2010 | எனது கணவர் எனக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் கணினி வழி சான்றிட்ட நகல் (கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணம் பதிவுத் துறையால் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்று ஆட்சேபனை தெரிவித்தார். கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணம் கையகப்படுத்தப்படவில்லை 2ம் வாதியின் ஆவணம் தான் பதிவுத் துறையால் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளது என்று ஆட்சேபனை தெரிவித்தார். மேற்படி ஆட்சேபனை வழக்கின் இறுதி தீர்ப்பின் போது தான் ஆவணத்தின் உண்மை தன்மை பற்றி முடிவு செய்ய இயலும் | பி.வா.சா.ஆ.3 |

| | | |
|---|---|---|
| | என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி ஆவணம் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. ) | |
| | மாதிரி வரைபடம் | **பி.வா.சா.ஆ.4** |
| | எனது கணவர் பெயரில் உள்ள தொழில் வரி ரசீதுகள் அசல் (எண்ணிக்கை –6) | **பி.வா.சா.ஆ.5** |

**கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

FANNY RAJAN

Principal District Munsif, Kancheepuram

Digitally signed by FANNY RAJAN